**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 36/2011**

நாள்: 02.07.2026.

பெயர்: சுப்பிரமணியன் (வா.சா.1) த/பெ : கலியபெருமாள்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>

1) என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் 13.02.1980ம் தேதியில் ஏற்பட்ட பாக அட்டவணை என்றால் சரிதான். அந்த பதிவு செய்யப்பட்ட பாக அட்டவணையின் அசல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1ல் D ஷெட்டியூல் சொத்து எனக்கு கார்டியனாக எனது தாயார் அஞ்சலையம்மாள் அடைந்து கொள்ள வேண்டிய சொத்துக்கள் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ன் படி எனக்கும், எனது தாயாருக்கும் ஒதுக்கப்பட்டது சர்வே எண்.51/3ல் உள்ள 4.5 செண்ட் சொத்து என்றால் சரிதான். நான் தற்போது குடியிருந்து வரும் வீடு மேற்படி பாகத்தில் கிடைக்கபெற்றது என்றால் சரிதான். அதன் தற்போதைய சர்வே எண் என்ன என்றால், சர்வே எண்.550/11. நான் 07.09.1998ல் நானும், எனது பெரிய தாத்தா அருணாசலத்தின் மகன் ராமச்நதிரன், ராமச்சந்திரனின் மகன்கள், மதியழகன், மனோகரன், சரவணன் ஆகியோர் சேர்ந்து எனக்கு பாத்தியப்பட்ட 750 சதுரடி மற்றும் ராமச்சந்திரனின் 750 சதுரடி ஆகியவற்றை குப்புசாமி முதலியார் மகன் தங்கவேலுக்கு கிரையம் கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி கிரையத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான், அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) பி.வா.சா.ஆ.1 பாக அட்டவணையின் படி ராமச்சந்திரனுக்கு பாத்தியப்பட்ட C ஷெட்டியூல் சொத்தில் 1523 சதுரடியை ராமச்சந்திரன் மற்றும் அவரது மகன்களிடமிருந்து எனது மகன் சபரிநாதன் பெயரில் 26.02.2007ம் தேதியில் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான், என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அந்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான், அது **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு பாகத்தில் கிடைத்தது, நான் விற்றது, நான் கிரையம் பெற்றது ஆகியன சேர்த்து பார்த்தால் சர்வே எண்.550/11ல் எனக்கு 6.2

செண்ட் மட்டுமே தற்போது உள்ளது என்றால் சரிதான். 26.02.2007ம் தேதிக்கு பின்னர் சர்வே எண்.550/11ல் நான் கிரையம் ஏதும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

3) பி.வா.சா.ஆ.1ன் படி இறந்த 1ம் பிரதிவாதி தியாகராஜனும், 3ம் பிரதிவாதியின் தந்தையும் 4ம் பிரதிவாதியின் கணவருமான வஜ்ஜிரவேலும் சேர்ந்து 22.11.2006ம் தேதியில் அவர்களுக்குள் இறந்துபோன 1ம் பிரதிவாதி தியாகராஜனுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.557/11ல் 1771 சதுரடி சொத்தை வஜ்ஜிரவேலுக்கு பாத்தியப்படுத்தியும், வஜ்ஜிரவேலுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.550/11ல் 2061 சதுரடி சொத்தை 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி பரிவர்த்தணை பத்திரம் எழுதி பதிவு செய்துகொண்டனர் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இறந்த வஜ்ஜிரவேலின் வாரிசுகளான 3ம் பிரதிவாதி வேல்முருகனும், 4ம் பிரதிவாதி சாவித்திரியும் சர்வே எண்.557/11ல் வீடுகட்டி குடியிருந்து வருகின்றனர் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி குடியிருக்கும் மேற்படி வீடு தாவா கிராமமான செங்குந்தபுரம் 5ம் தெருவில் கீழ்மேல் ரோட்டுக்கு தெற்கு, தென்வடல் வீதிக்கு மேற்கு, பொன்னுசாமி வீட்டிற்கு கிழக்கு, ஆறுமுகம் மகன் பரமசிவம் வீட்டிற்கும் வடக்கு என்ற நான்கெல்லையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் கீழ்மேல் வடபுறம், தென்வடல் மேல்புறம் கீழ்மேல் தென்புறமும் காம்பவுண்டு சுவர் உள்ளது என்றால் சரிதான்.

4) சர்வே எண்.550/11ல் தற்போது நான் குடியிருக்கும் வீட்டிற்கு கிழக்கில் இறந்துபோன 1ம் பிரதிவாதி தியாகராஜன் வீடு, மேற்கில் தங்கவேல் வீடு, தெற்கில் கீழ்மேல்வீதி, வடக்கில் எனது தோட்டபகுதிக்கும் வடக்கில் கீழ்மேல் பொது சந்து உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு வடக்கில் உள்ள பொது சந்தின் அகலம் சுமார் 15 அடி இருக்கும் என்றால் சரிதான், அதில் பாதி சிமெண்ட் ரோடாகவும், பாதி மண் பாதையாகவும் உள்ளது. மேற்படி நான்கெல்லையில் எனது வீட்டிற்கு முன்புறம் சாமிநாதனுக்கு பாத்தியப்பட்ட காலி மனை உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும், 1ம் பிரதிவாதி வீட்டிற்கும் இடையே கீழ்மேல் 4 அடி அகலமுள்ள தென்வடல் சந்து உள்ளது என்றால் சரிதான். நான் எனது வீட்டிலிருந்து கீழ்மேல் 4 அடி சந்து வழியாக வந்து மெயின் ரோட்டிற்கு சென்று வருகிறேன் என்றால்

சரிதான். எனது வீட்டிற்கு வடபுறமுள்ள மேற்படி 15 அடி அகலமுள்ள சந்து வழியாக எனது வீட்டு தோட்டத்திற்கு சென்று வருவேன் என்றால் சரிதான். எனது வீட்டின் கிழக்கில் இறந்த 1ம் பிரதிவாதியின் மகன் குமார் மாடி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். என் வீட்டிற்கும், குமார் வீட்டிற்கும் இடையே குமார் ஏற்படுத்திய தென்வடல் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். எனக்கும், குமாருக்கும் காம்பவுண்ட் தகராரோ, பாதை தகராரோ இல்லை என்றால் சரிதான். நானும், குமாரும் தனித்தனியாக குடியிருந்து வருகிறோம் என்றாலும், எங்களுக்குள் எந்த பிரச்சினையும் இல்லை என்றாலும் சரிதான்.

5) என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் வழக்கு தாக்கல் செய்த போது எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த எனது பெயரில் மட்டும் உள்ள மனைவரி பட்டா என்றால் சரிதான், அதில் பட்டா எண்.1798 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் புதிய புல எண் மற்றும் உட்பிரிவு என்று சர்வே எண்.550/8 என்று உள்ளது என்றால் சரிதான். அதன் பழைய சர்வே எண்.51/3 என்று உள்ளது என்றால் சரிதான். எனது வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புல வரைபடத்தில் சர்வே எண்.550 என்று உள்ளது என்றால் சரிதான். நான் வழக்குரையுடன் தாக்கல் செய்த கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா ஆவணத்தில் பட்டா எண்.3046 என்றும், சர்வே எண்.550/11 என்றும் உள்ளது என்றால் சரிதான், மேற்படி சிட்டாவில் உரிமையாளர்கள் என்ற இடத்தில் 1) வேலாயுதம் மகன் தியாகராஜன், 2) ராஜேந்திரன், 3) தங்கராசு மகன் மோகன், 4) வீரபத்ரன் மகன் சாமிநாதன், 5) அருணாச்சலம் மகன் ராமசந்திரன் என்றும் 6) எனது பெயரான கலியபெருமாள் மகன் சுப்ரமணியன் என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி சிட்டாவில் உள்ள அருணாச்சலம் மகன் ராமசந்திரன் என்பவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

6) வா.சா.ஆ.1 வாய்தா ரசீதில் எனது பெயரும், பட்டா எண்.3046 என்றும் உள்ளது என்றால் சரிதான். 3046 எனும் பட்டா எண் நான் தற்போது குடியிருந்து வரும் வீட்டிற்கானது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் பட்டா எண்.3046 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் உரிமையாளர் பெயரில் வேலாயுத

முதலியார் மகன்கள் தியாகராஜன், ராஜேந்திரன், தங்கராசு மகன் மோகன், வீரபத்ரன் மகன் சாமிநாதன், அருணாச்சலம் மகன் ராமசந்திரன் மற்றும் எனது பெயர் கலியபெருமாள் மகன் சுப்ரமணியன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் பழைய சர்வே எண்.51/3 என்றும், புதிய சர்வே எண்.550/11 என்றும் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 லும் அருணாச்சலம் மகன் ராமசந்திரன் பெயர் உள்ளது என்றாலும், அவரை இவ்வழக்கில் தரப்பினாக சேர்க்கவில்லை என்றாலும் சரிதான்.

7) வா.சா.ஆ.3 புலவரைபடத்தில் சர்வே எண்.51/5 ற்கானது என்றால் சரிதான். எனது சொத்திற்கும், வா.சா.ஆ.3 ற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் வீடு உள்ளதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2, 3 ஆகியவற்றை வழக்கு தாக்கல் செய்த பின்பு 13.02.2024 ல் பெறப்பட்டது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த 2011 ஆம் ஆண்டில் வா.சா.ஆ.2, 3 பெறப்பட்ட 2024 ஆம் ஆண்டிற்கும் இடையேயான 13 ஆண்டு கால தாமதத்திற்கு என்ன காரணம் என்றால் நான் எனது குழந்தைகளின் படிப்பு மற்றும் எனது வருமானத்திற்காக வெளியூரில் இருந்து வந்தேன். வா.சா.ஆ.2, 3 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு வருவாய் அலுவலர்களை சட்டத்திற்கு புறம்பாக வழிநடத்தி பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) எனது வழக்குரை சொத்து விபரத்தில் சர்வே எண்.550/11 ஏ ல் 700 சதுரடி மனை 8 சதுரமீட்டர் என்றும், நான்கெல்லை விபரத்தில் பாதைக்கும் தெற்கு, மேற்கு, சுந்தரேசன் வீட்டிற்கும் கிழக்கு, வஜ்ஜிரவேல் வீட்டிற்கு வடக்கு, இதில் 700 சதுரடி மனை 8 சதுரமீட்டர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எனது வழக்குரையில் சொத்துவிபரத்தில் பாதைக்கு மேற்கு, கிழக்கு என்பதை அடித்து பாதைக்கு தெற்கு, மேற்கு என எழுதப்பட்டுள்ளது என்றாலும், வஜ்ஜிரவேல் வீட்டிற்கு தெற்கு என்பதை அடித்து வடக்கு என்று எழுதப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். சொத்து விபர நான்கெல்லையில் பாதைக்கு தெற்கு, மேற்கு என எழுதப்பட்டுள்ள பாதையின் பெயரோ, நீள அகலமோ, எந்த திசையிலிருந்து எந்த திசைக்கு செல்கிறது போன்ற விபரம் குறிப்பிடப்படவில்லை என்றாலும், வஜ்ஜிரவேல், சுந்தரவேல் ஆகியோரின் தந்தை பெயர் குறிப்பிடவில்லை என்றாலும்

சரிதான். நான் இவ்வழக்கை விளம்புகை பரிகாரம் கோராமல், உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது வழக்குரையில் வழக்கு மூலம் பத்தியில் எந்த பிரதிவாதி எவ்வாறு இடையூறு செய்தார் என்று விபரம் குறிப்பிட்டுகூறவில்லை என்றால் சரிதான், ஆனால் 7, 8 பேர் வந்து பிரச்சினை செய்தார்கள். 29.01.2011 தேதியில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக தற்போது கூறும் விபரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் கூறிய காவல் நிலைய புகாருக்கான ரசீது ஏதும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து வேறு, நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கான சொத்து வேறு என்றால் சரியல்ல. நான் எனது சொத்தை நிம்மதியாக தான் அனுபவம் செய்து வருகிறேன் என்றாலும், பிரதிவாதிகள் என்னை எவ்வித இடையூறும் செய்வில்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் எனக்கு கிடைக்கபட்ட சொத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்திருந்தாலும், உரிமையை மறுத்து பேசியிருந்தாலும் நான் விளம்புகை பரிகாரமும் கோரி வழக்கை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு இல்லாததால் தான் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்பதால் தான் இவ்வழக்கை 15 ஆண்டுகளாக காலம் கடத்தி வருகிறேன் என்றாலும், அதனால் இவ்வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/க.சுப்பிரமணியன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.